50/=

# வேள்வித்தீ

தாமரைச்செல்வி



க. பரணீதரன்
ஆசிரியர் "ஜீவநதி"
கலையகம்
அல்வாய்.
இலங்கை.

# வேள்வித் தீ

தாமரைச்செல்வி



ஏழாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது

மீரா பிரசுரம்

- வேள்வித் தீ
- தாமரைச்செல்வி (நூலாசிரியர்)
- அட்டை ஓவியம்: தயா
- அட்டை ஒற்றுரு: ஆனந்தன்
- முதல் பதிப்பு சித்திரை 1994
- வெளியீடு: 24

மீரா வெளியீடு
38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

- அச்சமைப்பு: மஹாலக்ஷ்மி அச்சகம்
மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
- விலை: 25/- ரூபா


## தாமரைச்செல்வி எழுதிய நாவல்கள்

- சுமைகள்
- விண்ணில் அல்ல விடிவெள்ளி
- தாகம்
- வேள்வித் தீ
- வீதியெல்லாம் தோரணங்கள்
(இரசிகமணி கனக செந்திநாதன் நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற நாவல்)

# முன்னுரையாக ஒரு கருத்து

ஈழத்து இலக்கியங்கள் இன்னமும் அடிதூக்கி நகரத் தொடங்காமலேயே உள்ளன. தமிழகத்து இலக்கிய விழுதுகள் எங்கள் வேர்களாகப் பற்றி நிற்பதுவோ மேற்குலக இலக்கியங்கள் எம்மை வழி நடத்துவதோ ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. ஆனால் அவற்றின் உச்சங்களையும் போக்குகளையும் அறிந்து வைத்திருப்பதும் ஈழத்து இலக்கியங்களின் தரங்களை மதிப்பிட்டுக் கொள்வதும் அவசியமானதாகும். வெறுமனே சிறிய வட்டத்தில் நின்று கொண்டிருக்கும் அனேக ஈழத்திலக்கியங்கள் அதே தளத்தில் நின்றவாறே உயர்ந்தனவாகச் சித்திரிக்கப் படுகின்றன. இதற்கு கடந்த மூன்று தசாப்த இலக்கியங்கள் சான்று தரும். இந்தச் சித்தரிப்புக்களில் பல நடுநிலைமையில் நின்று செய்யப்பட்டிருக்கவில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்த இலக்கிய நிர்மாணப் பணிகளில் பெண் எழுத்தாளர்களது பங்கு குறைவென்பதொரு புறமிருக்க, எழுதப்புறப்பட்ட பெண்களில் ஒருசிலர் தவிர ஏனையோர் ஜனரஞ்சகமான பொழுதுபோக்கு இலக்கியங்களையே தந்து சென்றுள்ளனர்.

நதீன் கோதிமர், டோனி மாரீசன், தஸ்லிமாநஸ்ரீன் எனப்பலர் அனைத்துலக மட்டத்தில் எழுந்து நிற்கும் இந்நேரத்தில், எமது பெண் எழுத்தாளர்கள் தமிழ் வாசகர் மட்டத்திலாவது பேசப்படக்கூடிய நிலை தோற்றம் பெற வேண்டும்.

அத்தகைய ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தத் தக்கனவாக தாமரைச்செல்வியின் எழுத்துக்கள் அமைகின்றன.

1974ல் எழுத்துலகில் புகுந்த அவர் இரண்டு தசாப்தங்களாக இலக்கியம் படைத்து வருகிறார். போர்ச்சூழலில் அனேகர் ஒதுங்கியிருக்கும் போது, தாமரைச்செல்வி சமகாலப் பிரச்சனைகளைத் தொட்டு தொடர்ந்தும் எழுதி வருகிறார். தொண்ணூறு வரையான சிறுகதைகளை எழுதியுள்ள அவர், மூன்று நாவல்களை இதுவரை நூலுருவில் வெளியிட்டுள்ளார்.

வீரகேசரியின் 55வது வெளியீடாக வந்த இவரின் 'சுமைகள்' நாவல் கூழாங்கல் போன்று பயனற்று இருந்த இளைஞனொருவன் எப்படிச் சுமைதாங்கியாக மாறினான் என்பதைச் சித்தரிக்கிறது.

மீராவெளியீடாக வெளிவந்த 'விண்ணில் அல்ல விடிவெள்ளி' நாவலில் இந்திய இராணுவம் எமது மண்ணில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் மக்களது நிலை, படைகளின் அட்டூழியங்கள், கெடுபிடிகள், போராளிகளுக்கும் மக்களுக்குமிருந்த ஒட்டுறவு எல்லாம் கலை நேர்த்தியுடன் சொல்லப்பட்டுள்ளன.

விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த இவரது எழுத்துக்களில் விவசாயப் பகைப்புலங் களும் வர்ணனைகளும் கதை மையங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

'தாகம்' என்ற இவரது நாவல் கடந்த வருடம் மீரா வெளியீடாக வெளிவந்தது. இது கிளாலிப் படுகொலையைப் பதிவு செய்துள்ளதுடன், இரண்டாம் ஈழப் போர்க் காலத்தில் மக்களின் மாற்றம் மிக்க வாழ்க்கை முறையின் ஒரு பகுதியையும் வெளிக் கொணர்ந்துள்ளது.

சமூகமேம்பாட்டிற்கு உதவும் தாமரைச்செல்வியின் எழுத்துக்களில் சமூக வாழ்வின் எதார்த்தம் துல்லியமாகக் காட்டப்படுகின்றது. அத்தகைய ஒன்றாக—மீராவின் மூன்றா றாவது வெளியீடாக வேள்வித்தீ வெளிவருகிறது.

காலப்பதிவு இலக்கியங்களின் தேவையைத் தமிழீழம் நாடுகிறது. அதற்கு தாமரைச் செல்வியின் எழுத்துக்களும் உதவ வேண்டும்.

சுன்னாகம் தெற்கு, —இயல்வாணன்
1994-04-05

தூரத்தில் உள்ள பிரதான வீதியில் ஒரு வாகனம் தடதட வென்று ஓடியது அந்த இரைச்சலில் மனோவுக்கு விழிப்பு வந்து விட்டது. சட்டென்று கண் விழித்த போது மேஜை மீது பிரேமுக்குள் இருந்த ஜீவாவின் படம் பார்வையில் பட்டது.



கரும்பச்சைச் சீருடையில், தலையில் தொப்பியுடன் கூர்மையான பார்வையுடன் கைகளில் துப்பாக்கி ஏந்திய வண்ணம் கம்பீரமாகக் காட்சியளித்தான்.

படத்தில் நேற்றுச் செருகியிருந்த சிவப்பு றோஜா வாடிப்போயிருந்தது. ஒரு நிமிடத்துக்கு மேல் படத்தில் அவனைப் பார்க்க முடியாதவாறு கண்கள் நிறைந்து வழிந்தது.

ஒரு வருஷத்துக்கு முதல் இதே நாளில் இதே நேரத்தில் தோளில் சுமந்த ஆயுதத்துடன் இதே வீதியால் அவன் தனது தோழர்களோடு நடந்து போனதை அவள் பார்த்துக் கொண்டிருந்தவள்......

இதே நாளில்தான் அவன் தனது இறுதி மூச்சையும் இந்த மண்ணுக்காய் இழந்து விட்டிருந்தான்.

இன்றைக்கு ஒரு வருஷம் நிறைவு பெற்று விட்டதா? அதற்குள் இந்த நாட்கள் எப்படி ஓடின...அவளால் நம்பவே முடியவில்லை. எல்லாமே நேற்று நடந்தது மாதிரி இருந்தது அவன் தெருவில் சிரித்து அவளுக்குக் கையசைத்து விட்டுப்போனது... யன்னல் வழியாய் பார்த்து விட்டு ஓடித் தெருவுக்கு வந்தபோது தூரத்தில் அவன் மற்றவர்களுடன் நடந்து மறைந்து போனது... அதிர்ந்த குண்டுச் சத்தங்களிடையேயும் வெடிச்சத்தங்களிடையேயும் மனம் துடிக்க அவனுக்காகக் கடவுளிடம் பிரார்த்தித்தது மாலைநேரம் உயிரிழந்த அவன் உடலைப் பாடசாலையில் அஞ்சலிக்காகக் கொண்டு வந்து வைத்தபோது ஓடிப்போய் அவனைப் பார்த்துக் கதறி அழுது மயங்கிவிழ...அப்பா ஆதரவாய்த்தாங்கியது...



எல்லாமே நேற்றுத்தான் நடந்தவை போலிருக்கின்றன.

ஒன்பது வருஷங்களாய் ஒருவருடன் ஒருவர் பழகி வளர்த்துக் கொண்ட அன்பும் நேசமும் அவனது இழப்பைத் தாங்க முடியாமல் அவளைத் துடிக்க வைத்தன.

அன்றைக்கு அவளது அழுகையும் கதறல்களையும் அந்த ஊரே அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது.

''அந்தப் பெடியனில இந்தப் பிள்ளை உயிரையே வைச்சிருந்தது. இனி என்ன செய்யப்போகுதோ. பாவம்.''

ஜீவாவின் உடைகள் இரத்தத்தில் தோய்ந்திருக்க...விழிகளை அழுத்த மூடி மீசைக் குக்கீழே உதட்டில் உறைந்திருந்த ஒரு மெல்லிய சிரிப்புடன் அவன் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கிடந்த காட்சியை அவளால் ஒரு நிமிடம் கூட மறக்க முடியவில்லை.

எத்தனையோ சந்தர்ப்பங்களில் எதிரிகளைச் சாமர்த்தியமாக வீழ்த்திய அவன் ஒரு வினாடியில் எப்படி எதிரியின் குண்டுக்குச் சுலபமாய் ஏமாந்து போனான்.

தெய்வமே! இவ்வளவு விரைவாய் ஜீவாவுக்கு இந்த முடிவு வந்திருக்கக் கூடாது அவனுடைய வீரம்... திறமை... துணிச்சல் எல்லாமே அவனுடன் சாம்பலாகி விட்டதே...

அவள் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு கட்டிலிலிருந்து எழுந்தாள்.

மேஜைக்குக் கிட்டப்போய் அந்த போட்டோ 'ஸ்டாண்டை' க் கையில் எடுத்துப் பார்த்தாள்.

'ஜீவா'......

கதறி அழவேண்டும் போலிருந்தது.

கதவைத்திறந்து அம்மா எட்டிப்பார்த்தாள். மனோ படத்தை வைத்து விட்டு அம் மாவை நோக்கித் திரும்பினாள். அவளையும் படத்தையும் மாறி மாறிப் பார்த்த அம்மா ''எழும்பியிட்டியா எண்டு பார்க்க வந்தனான்...'' என்றாள்.

தாமரைச் செல்வி

ஏதோ கேட்க வந்தவள் வேறு ஏதோ கேட்கிறாள். என்று புரிந்தது. இவள் இப்படி நாளும் பொழுதும் அழுது கொண்டிருப்பது. அம்மாவுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை.

"இப்ப என்ன கலியாணமே நடந்துட்டுது. ஏதோ இந்த அளவில நடந்தது நடந்து போயிட்டுது. இனி உன்ர பாட்டில இரு..'' என்பாள்.

இப்படிச் சொல்பவளை ஒருதடவை முறைத்துப்பார்த்து விட்டு அவள் போய்விடுவாள்.

அவளின் மனதை அப்பா புரிந்து கொண்டது போல ..தங்கைகள் புரிந்து கொண்டது போல...இந்த அம்மா புரிந்து கொள்ளவில்லை. அவளைப் பார்த்து எந்த நேரமும் புலம்பல் தான்.

இந்த ஒரு வருசத்திலும் அப்பாவினதும் தங்கைகளினதும் ஆதரவும் கனிவும் இல்லாமல் போயிருந்தால் தான் உயிருடனே இருந்திருக்க முடியாது என்று தோன்றியது அவளுக்கு

அம்மாவிடம் மேலே பேச்சுக் கொடுக்காமல் பிரஷில் பேஸ்டைப் பிதுக்கினாள்.

''குளிக்கப் போறியா...'' அம்மா திரும்பவும் கேட்டாள்.

"இல்லை"

"ஏன்? இண்டைக்கு வேலைக்குப் போகேல்லையே...''

''இல்லை...''

''முந்தியே கனநாள் லீவு எடுத்திட்டாய். இப்ப...''

''அம்மா!''

—அவளின் குரல் அதட்டலாய் ஒலிக்க அம்மா ஒருகணம் திகைத்து நிமிர்ந்தாள்.

"நான் இண்டைக்கு வேலைக்குப் போறேலை எண்டு நினைச்சிருக்கிறன் இண்டைக்கு முழு நாளும் ஜீவாவைப் பற்றியே நினைச்சுக் கொண்டிருக்கப் போறன். அது தான் அவருக்கு நான் செய்யிற ஓராண்டு நினைவஞ்சலி...''



—சொல்லி விட்டு அவள் அம்மாவைப் பாராமல் அறையை விட்டு வெளியே வந்தாள்.

ஹோலைக் கடந்து சிறிய விறாந்தையில் நடந்து பின் பக்கம் கிணற்றடிக்குப் போனாள். பல் மினுக்கி முகம் கழுவிக் கொண்டு நிமிர்ந்து வானத்தைப் பார்த்தாள் சூரியனின் சிறிய ஒளிவட்டம் சிவப்பாய் எட்டிப்பார்த்தது. காலையிலேயே சில்லென்று குளிர் காற்று அடித்தது.

துவாய் கொண்டு வந்து நீட்டினாள். சுதா அக்காவின் முகத்திலிருந்த கவலையின் ரேகையைப் புரிந்து கொண்டவளாய் ஆதரவாய் பார்த்தாள். துவாயை வாங்கி முகம் துடைத்து விட்டு—

“சுதா, காசுதாறன் சந்திக்கு போய் ஈழநாடு, ஈழமுரசு, உதயன், முரசொலி எல்லாப் பேப்பரையும் வாங்கிக் கொண்டுவா...இண்டைக்கு ஜீவாவின் நினைவஞ்சலி வந்திருக்கும்” என்றாள்.

‘‘விடியவே கடை திறந்திடுவினம்தானே. நான் சைக்கிள்ள டக்கெண்டுபோ வாங்கியிட்டுவாறன்...’’

—துவாயை அவளிடம் கொடுத்து விட்டு மனோ உள்ளே வந்தாள்.

அம்மாவுடன் நித்தியாவும் அடுக்களைக்குள் நின்று கோப்பி போட்டுக் கொண்டிருந்தாள்.

மனோ தன் அறைக்குள் நுழையும் போது முன் விறாந்தையில் ஈஸிச்சேரில் படுத்துக்கொண்டு அப்பா பார்ப்பது தெரிந்தது.

அவளின் நடமாட்டங்களை மௌனமாக அவதானித்துக்கொண்டிருக்கிறார்.

ஒரு வினாடி தயங்கி விட்டு உள்ளே போய்க்காசு எடுத்து வந்து சுதாவிடம் கொடுத்தாள்.

சுதா காசை வாங்கிக்கொண்டு படி இறங்க அம்மா ''எங்க சுதா போகிறாள்'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

''பேப்பர் வாங்க''

சுதா தயக்கமாய் அக்காவைப் பார்த்தாள்.

போய்க் கோப்பியைக் குடிச்சிட்டு போற இடத்துக்குப் போ...''

''உதில இருக்கிற கடைதானே. சைக்கிளில ஒரு நிமிசத்தில ஓடிபபோயிட்டு வாறன்.''

—சுதா சைக்கிளை எடுத்துக் கொண்டு போனாள்

''நான் சொல்லுறதை இந்த வீட்டில ஆர் கேட்கினம், எல்லாம் நீங்கள் குடுக்கிற இடம்...''—அம்மா முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போனாள்.

மனோ விறாந்தைத் தூணோரம் சாய்ந்து கொண்டு தெருவைப் பார்த்தாள்.

அன்றைக்கு இதே தெருவில்...

கண்களில் பனித்துளிகள் பொங்கின.

அப்பா அவளை ஆறாத கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தார். ஜீவாவைத் தன்மகன் போல நேசித்தவர் அவர்...ஜீவாவுக்கும் அவளுக்கும் கல்யாணமாகவில்லைத்தான் ஆனால் அவர் பார்வையிலேயே பல வருடங்களாக வளர்ந்த காதல்...

இப்போது மகள் படுகிற வேதனையைப் பார்த்துத் தானும் உள்ளூர வெந்து கொண்டிருக்கிறார்.

டம்ளருடன் கோப்பியை மனோவிடம் நீட்டினாள் அம்மா.

வேண்டாம்— தலையசைத்து விட்டு மீண்டும் தெருவைப் பார்த்தாள்.

இதே நேரம்தானே...





''ஏன் வேண்டாம் குடியன்''

''இண்டைக்கு எனக்கு எதுவுமே வேண்டாம்.''

''பாருங்கோ இவளை'' —அப்பாவிடம் திரும்பி முறையிட்டாள் அம்மா.

அவர் உள்ளே கொண்டு போ என்று சைகை செய்ய அவள் தன் பாட்டில எதுவோ சொல்லிக் கொண்டு உள்ளே போனாள்.

அப்பாவைத் திரும்பிப் பார்த்தாள் மனோ.

நாடிக்குக் கை கொடுத்தபடி சாய்ந்து படுத்திருந்தார் அவர்.

அப்பா அரசாங்க நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற்றவர். மாசா மாசம் சம்பளம் எண்ணி வாங்கி, அதற்குள் சீவியம் நடத்தி சிறுகச்சிறுகச் சேமித்து இந்த வீட்டைக்கட்டி, மூன்று பெண்களையும் படிக்க வைத்தவர். பெண்களை எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாய் சுய இயல்புகளோடு வளர்த்தவர்.

மனோவுக்கு அப்பாவிடம் மரியாதை மதிப்பு இருந்த அளவுக்கு இயல்பாய் கதைத்து விவாதிக்கும் அளவு சுதந்திரமும் இருந்தது. தன் வாழ்வில் நடந்த ஒவ்வொரு விஷயத்திலும் அப்பா தந்த ஆதரவு அவள் மனதை நெகிழ வைக்கும்.

இப்போது தன்னைப்பற்றிய கவலையில் அப்பாவும் எவ்வளவு தூரம் மனத்தால் களைத்திருப்பார் என்பது தெரிந்தது.

ஓடிப்போய் அவரது மடியில் கிடந்து அழவேண்டும் போல இருந்தது.

இனிமேலும் அந்த இடத்தில் நிற்க முடியாது போல் இருந்தது. முற்றத்தில் நின்ற சிவப்பு றோஜா ஒன்றைப் பிடுங்கிக் கொண்டு தன் அறைக்கு வந்தாள்.

படத்தின் கீழ் வாடிப்போயிருந்த பூவை எடுத்து வைத்து விட்டு புதுப்பூவைப் படத்தின் கீழ் வைத்தாள். சாம்பிராணி குச்சி கொளுத்தி வைத்தாள்.

சுதா தான் கொண்டு வந்திருந்த பேப்பர்களை மனோவிடம் கொடுத்தாள்.

கட்டிலில் பரவிவைத்து ஒவ்வொன்றாய் விரித்துப்பார்த்தாள். உயிரை உலுக்கும் கவிதை வரிகளுடன் சிரிப்பு மாறாத ஜீவாவின் படம்...

கவிதைகளை நேசித்தவனுக்கு கவிதைகளினாலேயே அஞ்சலி...அம்மா...அப்பா...உறவினர்கள்...நண்பர்கள்...என்று...அந்தக் கும்பலில் அங்கீகரிக்கப்படும் உரிமையை இழந்தவளாய் அவள்...

அவனிடம் கெஞ்சியது ஞாபகத்தில் இன்னமும் இருந்தது. தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என்றால் அவன் தீவிரமாய் மறுத்துப் பதில் சொல்வான்.

“இன்னும் அதுக்கு காலம் இருக்கு மனோ.”

அந்தக் காலம் வராமலே போய்விட்டது.

பேப்பர்களை ஒழுங்காய் மடித்துத் தலையணையில் வைத்து விட்டு மறுபடி மேசை முன் அமர்ந்து படத்தில் சிரிக்கும் அவனைப் பார்த்தாள்

இந்த ஜீவாவை அவள் அறிமுகப்படுத்திக் கொண்ட நாட்களும் அன்பு செலுத்திய நாட்களும் பனிப்படலமாய் மனதில் மிதந்தன.

ஜீவாவும் பக்கத்து ஊர்தான்...நான்கு தெருக்கள் தள்ளி இருக்கும் வீடுதான். ஆனாலும் சிறிய வயதில் அவனைப் பார்த்த நினைவு இல்லை.

அவளது பதினான்காவது வயதில் கிளிநொச்சிக்குப் படிக்க பஸ்சில் போனபோது கூடவே அவனும் கைநிறைந்த புத்தகங்களுடன் பயணம் செய்தான்.



அட்வான்ஸ் லெவல் சிறப்பாக பாஸ்பண்ணி அவன் பல்கலைக்கழகத்திற்கு போன போது வாழ்த்திய மாணவிகளுடன் அவளும் ஒருத்தியாய் இருந்தாள்.

அப்போதே அவன் மீது மெல்லிய ஆர்வம் விழத்தொடங்கியது. பாடசாலையின் எந்த நிகழ்ச்சியிலும் முன்னணியில் நின்று உழைப்பான்.

அவனது சுறுசுறுப்பு, பேச்சாற்றல், இலக்கிய விஷயங்களிலுள்ள ஆர்வம்... எல்லாம் சேர்ந்து அவனை ஒரு கவனிக்கத்தக்க மாணவனாகக் காட்டியிருந்தது.

இரண்டாம் வருஷம் மனோவும் பல்கலைக்கழகத்திற்கு எடுபட்டுப் போனபோது அவன் மூன்றாம் வருட மாணவனாக இருந்தான். இயல்பாய் எழுதுகின்ற கவிதைகளும் ஆணித்தரமான விவாதங்களும் தெளிவான பேச்சும் அவனிடம் இன்னும் அதிகமாய் ஈர்க்க வைத்தன.

இருவரும் ஊருக்கு வரும் நேரங்களில் ஒன்றாகப் பயணம் செய்த நேரங்கள் இன்னும் அவர்களை நெருங்க வைத்தது

ஊரில் வந்திருக்கும் நேரங்களில் பலதடவைகள் அவளின் வீட்டுக்கும் வருவான். அப்பாவுடன் நேரம் போவது தெரியாமல் கதைத்துக் கொண்டிருப்பான். அவனை அப்பாவுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

அவனது பேச்சுக்கள் அவரது இளமைக் காலத்தில் மனதில் தலை தூக்கி மடிந்து போன பல கனவுகளை— இலட்சியங்களை— மீண்டும் தலை தூக்கச்செய்தன. அவனைச் சந்திப்பதை அவர் ஆவலுடன் எதிர்பார்க்கத்தொடங்கினார். இளமையில் இப்படிப்பட்ட புதிய கருத்துக்கள் தோன்றுவது இயல்பு போலும்.

அன்றொருநாள் அவன் வந்திருந்தபோது அடி மனத்திலிருந்து பேசுவது போலப் பேசினான்.

"எங்களுக்கு ஒரு அரசியல் தலைவர் இல்லை. இதுதான் எங்கட சமுதாயத்தில் உள்ள குறைபாடுகளுக்குக் காரணம்."

"ஏன்...... அந்த நாளிலயிருந்து இந்த நாள் வரையில எத்தனையோ தலைவர்மார் எங்கட இனத்தில இருக்கேலையே...அவையளின்ர அறிவையும் ஆற்றலையும் ஒருத்தராலயும் மறுக்கேலாது'' என்றார் அப்பா.

அவன் இதைக் கேட்டு ஒருவிநாடி மௌனமாக இருந்தான். ஒரு பிறகு சிரிப்புடன் சொன்னான்.

"உண்மைதான். அவையளின்ர அறிவும் ஆற்றலும் பெரிசுதான். ஆனால் அந்த அறிவும் ஆற்றலும் எதுக்குப் பயன்பட்டுது. பாராளுமன்றத்தில தங்கட விலாசங்களை எழுப்பிறதுக்காகத்தான் பேசினவையே தவிர எங்கட இனத்தைப்பற்றி ஆர் யோசிச்சினம்''

''அப்பிடி எல்லாரையும் சொல்ல ஏலாது தம்பி. அப்ப இருந்த சூழ்நிலையும் வேறதானே...''

''சூழ்நிலை வேறாய் இருந்தால் கொள்கையளும் வேறாய்ப்போயிடுமே சொல்லுங்கோ. அவையெல்லாம் உண்மையான அரசியல் தலைவர்கள் இல்லை. சந்தர்ப்பவாத அரசியல் தலைவர்கள் தான். சேவையை வியாபாரமாக்கிவிட்ட ஆட்கள். அவையளின்ரை செல்வாக்கு இப்ப சந்திக்கு வந்திட்டுது. இழப்புக்களுக்கும் துயரங்களுக்கும் நடுவே விழித்து எழுந்துவிட்ட இந்த இளம் தலைமுறையினரை அவையளால ஏமாத்த முடியேலை. இண்டைக்கும் பெடியள் இல்லையெண்டால் எலெக்ஷனுக்கும் ஓமெண்டு சொல்லுவினம்... அரசியலிலும் சரி சமுதாயத்திலும் சரி... நல்ல வழிகாட்டி இல்லையெண்டால் முழு இனத்துக்கும் நட்டம்தானே... ஆடம்பரங்களையும் நாகரிக வசதிகளையும் தேடி நகர்ப்புறத்துக்கு நாங்கள் போறம். இதனால எங்கட நிலம் பறி போகுது. சீதனம் தேடிக் கொடுக்கவேண்டுமே எண்டு பிள்ளையளைக் குறைவாய்ப் பெற்றுக் கொள்ளுறம் இதனால எங்கட இனம் பெருகாமலே போகுது. இதுகளெல்லாம் எங்கட இனத்தின்ர பாதுகாப்புக்குப் பெரிய அச்சுறுத்தல்களாய் இருக்குது.''



அப்பா பிரமிப்புடன் அவனைப்பார்த்துக் கொண்டிருந்தார். மனோ அவனைப் பெருமையாய்ப் பார்த்தாள்.

அவன் ஒரு விநாடி நிறுத்தி விட்டுத் தொடர்ந்தான்

"இப்ப எல்லாம் சனங்கள் நிம்மதியில்லாத மனதோடதான் வாழ்ந்து கொண்டிருக்குதுகள். ஒரு வித பற்றாக்குறை மனப்பான்மை ஏழை பணக்காறன் எண்ட வித்தியாசமில்லாமல் எல்லாரிட்டையும் பரவிக்கிடக்கிது. நாங்கள் நேசிக்கிறதையே மறந்திட்டம். அதால நிம்மதியையும் இழந்திட்டம். நாங்கள் ஆருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுறது? அதுக்குத் தகைமையுள்ள தலைவர்கள் எங்களுக்கு இருக்கினமே? மண்ணை நேசிக்கிறவன் தான் மக்களையும் நேசிப்பான். எதிரியிட்டப் பறிபோய்க்கொண்டிருக்கிற எங்கட மண்ணையே நேசிக்காத ஆட்கள் மக்களையா நேசிக்கப் போகினம். எல்லாமே சுயநலம்.''

பேசிப் பேசியே அடியோடு அப்பாவை மாற்றியது அவன் தான். அவனது நேரடியான பேச்சும் தெளிந்த அறிவும் அப்பாவுக்கு அவன் மீது பெருமதிப்புக்கொள்ள வைத்துவிட்டது. எதையுமே அவன் நேரடியாய்ப் பேசுவான்.

அப்படித்தான் மனோவைத் தான் விரும்புகின்ற செய்தியையும் அவரிடம் இயல்பாய்ச் சொன்னான். ஏற்கெனவே அவர் இதை ஊகித்து வைத்திருந்தாலும் அவன் நேரடியாகக் கேட்பான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் அவனுடைய வெளிப்படையான மனம் அவருக்குத் தெரிந்ததால் இந்த அணுகு முறை அவனுடைய இயல்பு என்பது புரிந்தது.

"நான் என்ன தம்பி சொல்லுறது. இதைப்பற்றி உங்கட வீட்டில கதைக்க வேணும். இந்தப் பின்தங்கின கிளிநொச்சிப் பிரதேசத்தில இருந்து கொண்டு நீங்கள் ரெண்டு பேரும் கம்பஸில படிச்சு நல்ல நிலைமைக்கு வாறது பெரிய விஷயம். உங்கட படிப்புக்கள் முடியட்டும். நல்ல வேலை கிடைக்கட்டும் நிறைய நாள் அவகாசம் இருக்கு...''

''எங்கட வீட்டைப் பற்றி ஏற்கனவே உங்களிட்டச் சொல்லியிருக்கிறன். உங்களுக்கு ஏதோ நடுத்தர வர்க்கம் எண்ட நிலைமையாவது இருக்கு. எங்களுக்கு அந்த நிலைமையும் இல்லை. எங்கட குடும்பம் ஏழ்மையானதுதான். நல்ல வீடு இல்லை நான் தான் மூத்தவன் எனக்கு ரெண்டு தம்பியும் ரெண்டு தங்கையும் இருக்கு. இருக்கிற மூன்று ஏக்கர் காணியில ஐயா வயல் செய்யிறார். சரியாய்க் கஷ்டப்பட்டுத்தான் எங்களைப் படிக்க வைக்கிறார். ஒரு விதத்தில நாட்டு விடுதலைக்கு என்னை அர்ப்பணிக்காமல் தடுக்கிறது எங்கட குடும்ப சூழ்நிலைதான். இப்படி ஒரு குடும்பத்திலதான் மனோ வந்து வாழ வேண்டியிருக்கும் இப்போதைக்கு உங்கட சம்மதம் எங்களுக்குப் போதும்.''

—அவன் நெகிழ்வோடு சொன்னான்.

அவனைப் போன்ற ஒரு கொள்கைப் பற்றுள்ள மென்மையான இயல்புள்ளவன்தான் மனோவுக்குக் கணவனாய் இருக்க முடியும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டார்.

அம்மாவுக்கு இதில் கொஞ்சம் வருத்தம் தான்.

''எங்களோட ஏதோ கொஞ்சம் வசதியாய் இருந்தவள் அவையின்ர கொட்டில் வீட்டை எப்படிப் போய் இருப்பாள். அது சரியான பொறுப்பான குடும்பம். இவள் நிம்மதியாய் வாழ ஏலுமே. இரவு பகலாய் ஓயாமல் பெடியனோட கதைக்கிற போதே எனக்குத் தெரியும். அவளுக்குத்தான் இந்த வயதில விபரம் புரியேலை எண்டா உங்களுக்கும் விளங்காதே... அண்டைக்கு பாக்கியத்தின் மகளின்ர கல்யாணத்துக்குப் போறபோது பார்த்தனான், அவையின்ரவீடு கொட்டில் வீடு. அவ தாய் பெரிய ஆள் மாதிரி முகம் கொடுத்துக் கதைக்கேலை. எனக்கெண்டால் இதொண்டும் பிடிக்கேலை. நீங்கள் தான்......''

—சொல்லிக் கொண்டு போனவளை அப்பா இடைநிறுத்தினார்'

ஆட்களைப் பற்றிச் சரியாய்த் தெரியாமல் கதைக்கக்கூடாது. எங்களில கோவிக்க அதுகளுக்கு என்ன காரணம் இருக்கப் போகுது. இது உன்ரை எண்ணம் குடிசை வீட்டில இருக்



கிறதுகள் நெடுக அப்படியே. அதை நாங்கள் பெரிசாய் எடுக்கக்கூடாது. மனிசர்தான் முக்கியம்...''

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனக்குச் சார்பாய்ப் பேசும் அப்பாவை அவள் சந்தோஷத் துடன் பார்த்தாள்.

எதிர்காலத்தின் கனவுகள் மனதில் பூவாய் மலர்ந்தன. படிப்பு.. அது முடிந்ததும் நல்ல வேலை....பிறகு கல்யாணம்... என்ற சராசரி நினைவுகள் தான் மனதில் தோன்றின.

மனோ இரண்டாம் வருஷத்திலும் அவன் கடைசி வருஷத்திலும் படித்துக் கொண்டிருந்த போதுதான் அவர்களது தலை விதியை மாற்றிய அந்தச்சம்பவம் நடந்தது.

மனோ தான் தங்கியிருந்த வீட்டிலிருந்து புறப்பட்டுப் பல்கலைக்கழகத்திற்குப் போய்க் கொண்டிருந்தபோது அவன் அவசரமாக சைக்கிளில் ஓடிவந்தான்.

விழிகள் சிவந்திருக்க, தலை கலைந்து போயிருந்தது அவனுடைய கோலத்தைக்கண்டு திகைத்துப் போய்ப் பார்த்தாள் மனோ. ''மனோ! நேற்று தம்பி குமார் என்னைப் பார்க்க எண்டு இங்க வந்தவன். ராத்திரி ஆமி செக் பண்ண வந்த இடத்தில பிடிச்சுக் கொண்டு போயிட்டாங்கள். அவன் அட்வான்ஸ்லெவல் படிக்கிறான்.. எதிலயும் ஈடுபடாதவன் எண்டு எவ்வளவோ சொல்லியும் அவங்கள் கேட்கேலை. எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை

—கலங்கிய குரலில் சொன்னான்.

பதறிப்போன மனோ, ''யாரையாவது பிடிச்சு விடுதலை செய்ய ஏலாதே...ஐயோ அடிக்கப் போறாங்களே ...'' என்றாள்.

''குமார் தன்ர பாட்டில இருக்கிறவன்... என்ன சித்திரவதை செய்யப் போறாங்களோ வீட்டில அறிஞ்சால் தாங்க மாட்டினம். பார்ப்பம. எனக்குத் தெரிஞ்ச ஒருதர் இருக்

கிறார். அவரிட்டக் கேட்டுப் பார்ப்பம். நான் வரட்டே...''

அவன் சைக்கிளில் போவதைப் பார்த்துவிட்டு அவள் சோர்ந்து போய் நடந்தாள். மனதுக்குள் பய அலைகள்..

'ஆமிக்காறங்கள் பிடிச்சா விடுவாங்களே. கடவுளே வீட்டில அறிஞ்சால் அவையள் என்ன பாடுபடுவினம்.

விரிவுரை வகுப்பில் எதுவுமே அவள் மனதில் பதியவில்லை. அதன் பிறகு நாலு நாளாய் அவன் வரவில்லை.

அவளுக்குத் தவிப்பாக இருந்தது.

ஐந்தாம் நாள் மாலையில் அதே கவலையான முகத்துடன் வந்தான். ''தம்பியை விட்டிட்டாங்களே...?''—ஆவலுடன் கேட்டாள். அவள் ''விட்டிட்டாங்கள். ஆனா'' அதைவிட அவனைச் சுட்டிருக்கலாம்'' என்றான் அவன்.

சிவப்பான கண்களில் வெறிபடரப் பல்லைக் கடித்தான்.

''ஏன் என்ன நடந்தது ?

''அடி அடியெண்டு அடிச்சுப் போட்டாங்கள். சரியான சித்திரவதையாம் பாவம் குழந்தைப் பெடியன். தாங்க ஏலாமத் துடிச்சுப் போயிட்டான். பெரியாஸ்பத்திரியில கொண்டுவந்து வாட்டில விட்டிருக்கிறன். அழக்கூட ஏலாமல் படுத்திருக்கிறான். அந்த அளவுக்கு அந்த மிருகங்கள் நடந்திருக்குதுகள். என்ன அநியாயம் பார்த்தியே...''

கண்களின் சிவப்பில் மெல்லிய நீர்க் கசிவு. குரல் கரகரக்க—

''அவனைப் பார்க்க என்னால தாங்க ஏலாமல் கிடக்கு'' என்றான்.

அன்று மாலை மனோவும் அவனுடன் போய்க் குமாரைப் பார்த்தாள். அவளுக்கே வாய்விட்டுக் கதறவேண்டும் போலிருந்தது.





அதன்பிறகு அவனை இரண்டு வாரமாகக்காணவில்லை. பிறகு வந்து “குமாருக்குக் கொஞ்சம் சுகம். வீட்ட போயிட்டான். ஆனா என்ர மனதின்ர காயம் ஆறவே இல்லை மனோ!” என்றான்.

தலையைக்குனிந்து கொண்டு வெகுநேரம் முன்னால் அமர்ந்திருந்தான். அவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியவில்லை. ஏதோ பேசவந்தவன் எதையும் பேசாமல் போய் விட்டான்.

அதன் பிறகு பல நாட்கள் அவன் பல்கலைக்கழகத்திற்கு வரவில்லை. என்ன ஏதென்று புரியாமல் அவள் தவித்துப்போனாள். அவனது நண்பர்கள்தான் ஒரு மாதத்திற்குப் பிறகு அவளிடம் விஷயத்தைச் சொன்னார்கள். ஒரு விநாடி அவள் அதிர்ந்து போனாள். தன்னிடம் எதையுமே சொல்லாமல் போய்விட்டானே என்பது தான் பெரிய ஆதங்கமாய் இருந்தது அவளுக்கு. அதைத்தான் அவளால் தாங்கமுடியாமல் இருந்தது. மறுநாளே பஸ் எடுத்து வீட்டுக்கு வந்து விட்டாள்.

அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னபோது அவர் மௌனமாய் இருந்தார்.

என்றாவது ஒரு நாள் அவன் இம்மாதிரியான முடிவை எடுக்கக்கூடும் என்று எதிர்பார்த்தவர்போல அமைதியாய் இருந்தார் அவர்.

அம்மா தான் ஏங்கிப்போனாள்.

“இதென்ன கரைச்சல்...உன்னை நடுத்தெருவில விட்டிட்டு இயக்கத்துக்குப் போட்டானே...போனவன் இனி என்ன திரும்பி வரப்போறானே. இனி என்னடி செய்யிறது...”

அம்மாவை நித்யா அதட்டினாள்: ‘‘சத்தம் போடாதை. அம்மா... இயக்கத்துக்குப்போறது எண்டவுடன சாவைப்பற்றி ஏன் நினைக்கிறாய். போறவை எல்லாரும் செத்துப் போயிடுவினமே... கத்தாதை, பேசாமல் இரு...’’

யாருடைய வார்த்தைகளையும் கவனிக்கவில்லை மனோ.

யந்திர உணர்வோடு இறுகிப் போனாள்.

இறுதிப் பரீட்சையை ஏனோதானோ என்று எழுதியதும் ஒரு வருஷம் வீட்டில் இருந்ததுமாக இரண்டு வருஷங்கள் ஓடிப்போய் விட்டன.

அவனைப்பற்றி எந்தத் தகவலும் இல்லை. கஷ்டப்படுகின்ற தன் குடும்பத்துக்காக வாழவேண்டும் என்று சொன்னவன் இந்த நாட்டையே தன் குடும்பமாக நினைத்து விட்டான். போலிருக்கிறது. தன்னைப் போலவே அவனது குடும்பமும் எப்படிக்கலங்கிப் போயிருக்கும். என்று யோசிக்கையில் அவளுக்குக் கவலையாய் இருந்தது. அவர்களைப்போய்ப் பார்த்துவரத் தைரியம் வரவில்லை அவனைப்பற்றிய சிறு தகவலாவது கிடையாதா என்று காத்திருந்த போது கொஞ்சமும் எதிர்பாராமல் அவன் வந்தான்.

சிவானந்தனாக இருந்தவன் ஜீவாவாகத் திரும்பி வந்தான். வந்த முதல் நாள் கூட அப்பாவுடன்தான் நிறையக்கதைத்தான். மனோவுடன் அப்போது தனியக் கதைக்கச் சந்தர்ப்பம் இருக்கவில்லை. அவள் பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் மெதுவாகவே சொல்லி விடை பெற்றுக்கொண்டு போய் விட்டான்.

அவள் அழுகைக்குத் தயாரானபோது அப்பா தேறுதல் சொன்னார்.

''நாட்டுக்காக அவன் தன்னைத் தியாகம் செய்ய எப்ப தீர்மானித்தானோ அப்பவே நீயும் சில தியாகங்களைச் செய்யத்தயாராக வேணும் மனோ!''

அதன் பிறகு அவர்கள் பிரதேசத்தில் அவன் தங்கியிருந்த நேரங்களிற் பல தடவைகள் வந்து பேசிக்கொண்டிருப்பான்.





அப்பா வீட்டில் இல்லாத நேரம் ஒரு தடவை வந்தபோது அவளுடன் மனம் விட்டுக் கதைத்தான்.

“நான் இந்த முடிவு எடுத்ததில் உனக்குச்சந்தோஷம் இல்லையா மனோ...” – அவள் கண்களை நேராகப்பார்த்துக் கொண்டு அவன் கேட்டபோது அவளால் எவ்வித பதிலையும் சொல்ல இயலவில்லை. அழுகைதான் வந்தது. ஆனாலும் அவனுக்கு முன்னால் அழுது விடக்கூடாது என்பதில் திடமாக இருந்தாள்.

அவனது இறுகிப்போன முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்: அவன் கழுத்தில் கட்டியிருந்த கறுப்பு நிறக்கயிற்றையும் அதில் தொங்கும் சயனைட்டையும் காண அவள் நெஞ்சம் தவித்து வறண்டது.

மரணத்தையே மாலையாகப் போட்டிருக்கும் இந்தக்கொள்கை வீரனின் முன்னால் தான் கோழையாகிப் போய்விடக் கூடாதே என்று முதல் தடவையாய்க் கவலைப்பட்டாள்.

“என்ரதம்பி பாதிக்கப்பட்டிட்டான். எண்டதுக்காக மட்டும் நான் இந்த முடிவை எடுக்கேல்லை. அவனை மாதிரி எத்தனையோ பேருக்கு ஏற்பட்ட பாதிப்பும் இழப்பும் தான் நான் போனதுக்கே காரணம்.”

“ஆனாலும் உங்கட வீட்டில...”

“அவையள் என்னைத்தான் நம்பியிருந்தவை. என்னை எவ்வளவோ கஷ்டப்பட்டு படிக்க வைச்சவை. அதை நினைச்சா எனக்கும் கவலைதான்.

என்ர தம்பியவையை நல்லபடி உருவாக்கி விடுகிற அளவுக்கும் தங்கச்சியவைக்குக் கல்யாணம் செய்து வைக்கிற வரைக்கும் என்னால் இருக்க ஏலாமல் போயிட்டுது. எத்தனையோ குடும்பங்களில் சாப்பிடவும் வழியில்லாமல் சரியாய்க் கஷ்டப்படுகுதுகள். அதுகளோட ஒப்பிட்டா எங்கட குடும்பத்தில ஏதோ வயல்ல விளையிறதைச் சாப்பிட்டுக்

கொண்டிருக்கிற நிலமை பறுவாயில்லை, ஐயா ஏலுமான காலம் வரைக்கும் உழைச்சுக் கஞ்சியாவது ஊத்துவார் இதுக்கு மேலை வசதியையே அதுகள் கல்யாணத்தையோ எதிர் பார்க்கிறது ஒரு விதத்தில தவறு. அதுவும் எங்கட இனம் இப்ப இருக்கிற நிலையில ..எங்கட தேவை எதுஎண்டு இப்ப சனங்கள் உணர்ந்து கொண்டாலே காணும்.''

- அவன் நிதானமாய்ச் சொல்வதை அவள் ஒரு வித ஆதங்கத்தோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவனுடைய பார்வையின் அந்தப் பிரதானமான கோணம் தனக்கு ஏன் மனதில் பதியாமல் போனது என்று கொஞ்சம் கவலைப்பட்டாள்.

கல்யாணம், குழந்தை, குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே சுழன்று கொண் டிருக்கும் சராசரி மனிதர்களிடையே இவன் வித்தியாசமாய்இருக்க முயல்கிறான். என்பது அவள் மனதை நெகிழ வைத்தது

தனது சுகங்களை எல்லாம் தியாகம் செய்து நிற்பவனைத் தான் தன்க்காக மட்டும் வாழச்சொல்வது எத்தனை அபத்தமானது. என்று நினைத்த அவள் அன்றே தனது முழு ஆதரவையும் அவனது இலட்சியப் பணிக்கு அர்ப்பணிப்பது என்று முடிவு செய்து விட்டாள்.

ஆறு மாதங்கள் வரை கிளிநொச்சியில் இருந்தவன் அதன் பின்னர் முல்லைத்தீவுக்குப் போய் விட்டான் அவன் தூரத்துக்குப் போய் விட்டாலும் அவளைப் பொறுத்தவரை அருகிலேயே இருப்பது போன்ற உணர்வு...

இங்கே தங்கியிருக்கின்ற அவனது தோழர்களிடம் அவனது சுகங்களை அடிக்கடி விசாரித்துக் கொள்வாள். முல்லைத்தீவில் ஏதாவது பிரச்சினை என்றால் அவனுக்காகக் கடவுளிடம் பிரார்த்திப்பாள்.

இப்படி அவனது சுகத்திற்காகவும் அவனது வெற்றிகளுக்காகவும் கடவுளிடம் வேண் டிக் கொண்டிருப்பது தான் தனது வாழ்க்கை என்று தீர்மானித்துக் கொண்டாள்.



அவன் வரும் சந்தர்ப்பங்களில் தன் பெற்றோரை.. சகோதரர்களைப் பார்த்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்கும் வருவான்.

அவளுக்கு அப்போது ஒரு அலுவலகத்தில் வேலையும் கிடைத்திருந்தது.

வேலைக்குப்போய் வந்து கொண்டிருந்ததில் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது அவள் அப்படி வெளியே போய் வருவதில் அப்பாவுக்கும் மன அமைதியாய் இருந்தது.

ஜீவா கடைசியாய் இங்கே வந்து நின்ற போதுதான் இராணுவத்துடனான மோதல் நடந்தது.

முதல் நாள் இரவு வெகுநேரமாய் அவர்கள் வீட்டில் இருந்து அவன் பேசிக் கொண்டிருந்தபோது, அவள் ஆற்றாமையோடு கேட்டாள்.

"உங்கட வாழ்க்கையை நீங்க தீர்மானிச்சிட்டீங்கள். எனக்கெண்டும் ஒரு, வாழ்க்கை வேணும். உங்கட பணியில நான் குறுக்கிடவே மாட்டன். என்ர கழுத்தில ஒரு தாலி கட்டினீங்கள் எண்டால் போதும் ஜீவா..." —அவள் குரல் தழுதழுத்தது

"கொஞ்சம் பொறு மனோ... இன்னும் காலம் இருக்கு. ஒவ்வொரு தடவையும் எதிரியோட சண்டை பிடிக்கிற போதும் எனக்காக ஒருத்தி காத்திருக்கிறுள்; நான் அவளுக்காக உயிரோட மீளவேணும் எண்ட உணர்வு ஒவ்வொரு விநாடியும் என்ர மனதில இருக்கும் அதனால எத்தினை வெறியோட போராடினாலும் ஒரு கவன உணர்வு இருக்கும். மனோ இந்தப்போராட்டம் ஒரு நாளைக்கு வெற்றியோட முடியும். அந்த நாள் வாறபோதுதான் நான் என்னைப் பற்றியும் என்ர வாழ்க்கை பற்றியும் யோசிக்கலாம்" - ஜீவா.

அந்த அரை இருட்டில் முகத்தில் ஒரு நிதானம் குமிழியிட அவன் அழுத்தமாய் இதனைச் சொன்ன போது அவளால் மேலே எதுவும் பேச முடியவில்லை. ஆனாலும் அவள் கண்கள் கலங்கியது இருட்டில் அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை

மறுநாள் காலையில் தோழர்களோடு வீதியில் போனவன்... அவளுக்கு கையசைத்து நடந்தவன்... சிறிது நேரத்தில் முடிவைத் தேடிக் கொண்டான்.

இந்த ஒரு வருஷமும் மனத்தளவில் ஒரு வெறுமையுடன் வேலைக்குப் போவதும் வருவதுமாய் ஒரு யந்திர வாழ்க்கைதான் வாழுகிருள். தெருவில் துப்பாக்கியுடன் திரியும் ஒவ்வொரு இளைஞனுக்குமாய் பிரார்த்தித்துக் கொண்டு ..

அவள் தலையை இரண்டு கைகளாலும் தாங்கிக் கொண்டாள். நெஞ்சுக்குள் வலித்தது. தொண்டைக்குள் துயரம் பந்தாக வந்து அடைத்தது.

இந்த ஒரு வருஷத்துக்குள்ளும் குமாரை மட்டும் அடிக்கடி சந்திப்பாள். அதே பார்வை அதே இயல்பு...தயங்கித் தயங்கித்தான் அவளுடன் குமார் கதைப்பான். ஜீவாவின் சகோதரன் என்ற ரீதியில் அவனைச் சந்தித்து கதைத்தால் அவளுக்கு ஆறுதலாய் இருக்கும்.

தான் படிப்பை விட்டு விட்டதாகவும் ஒரு கட்டட மேற்பார்வையாளரிடம் உதவியாளனாய் இருப்பதாகவும் குமார் சொன்னான். ''அண்ணை போன பிறகு இந்த ஒரு வருஷமாய் வீட்டில எல்லாருக்கும் வருத்தம்தான். ஐயா சரியாய் நொந்து போயிட்டார். முன்போல அவரால வயல்ல பாடுபட ஏலாது. தம்பி இப்ப அட்வான்ஸ் லெவல் படிக்கிறான். அக்காவையளோ நானோ அண்ணையோ ஒழுங்காகப் படிக்கஏலாமல் போச்சு. அவனாவது படிச்சு நல்லா வரவேணும். அதுதான் நான் ஏதோ ஒரு வேலை தேடினனான்.''

—தன் வீட்டு நிலைமைகளைக் குமார் இயல்பாய் உரிமையோடு அவளிடம் சொல்வான்.

அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று அவள் மனம் துடிக்கும். ஆனால் எந்த விதத்தில் செய்வது என்றுதான் புரியவில்லை.



ஜீவாவின் இழப்பிலிருந்து அந்தக் குடும்பமும் இன்னும் மீண்டு எழவில்லை என்பதை நினைக்க நெஞ்சு வலித்தது.

"மனோ—"

—மறுபடி அம்மாவின் குரல்...

தலையை நிமிர்த்தி அம்மாவைப் பார்த்தாள்.

"இப்பிடி அழுது கொண்டே இருந்தால் எப்பிடி...அவன்தான் போயிட்டான். நீ வாழவேண்டாமே... செத்தவனோட எல்லாரும் செத்துப் போக ஏலுமே... அவனை மறந்திட்டு மனதைத்தேற்றிக் கொள்ளடி. உன்னைப்பார்க்க என்ர வயிறு பத்தி எரியுது..."

கண்களில் கொஞ்சம் கண்ணீரோடு அம்மா தழுதழுத்தாள்.

ஒரு விதத்தில அம்மாவும் பாவம். அவளும் தனக்கு எதிரி அல்ல. தனக்கு அநியாயம் செய்யும் மனதுள்ளவளும் இல்லை என்பது மனோவுக்குத் தெரியும். அவளது இயல்பு அது. மகளின் வாழ்வு இப்படியாகியதே என்ற தவிப்பு...

யதார்த்தமாய் யோசித்தால் சராசரி தாய்மனம்... அந்தச் சராசரி மனத்தில் சிலவேளைகளில் வார்த்தைகள் கடுமையாய் வரும். அவ்வளவு தான். அவளுக்கு இப்போது அம்மா மீது கோபமே வரவில்லை.

"அம்மா! என்ர பதினாறு வயசிலயிருந்து எனக்கு ஜீவாவைத்தெரியும். இந்த ஒன்பது வருஷங்களாய் மனதில் சுமந்து கொண்டிருந்தவனை ஒரு நாளையில மறக்கச் சொன்னால் முடியுமே. அதுவும் இண்டைக்கு... இந்த நாளில ஒரு நிமிஷம் கூடத் தவறாமல் எல்லா நேரமும் ஜீவாவையே நினைச்சுக் கொண்டிருக்கப் போறன். தயவுசெய்து இண்டைக்கு எதுவுமே கதைக்காதேங்கோ..."

அடுத்த வார்த்தை சொல்லாமல் அம்மா கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே போனாள். அப்பா "மனோ" என்று கூப்பிடுவது கேட்டது. அவள் அழுதமுகத்தைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்தாள். அப்பாவுடன் குமார் நின்று கொண்டிருந்தான். அவளைக்கண்டதும் மெல்லிய குரலில் சொன்னான். "இண்டைக்கு அண்ணையின்ர ஆண்டுத்திவசம், ஐயாவும் அம்மாவும் உங்களிட்டச் சொல்லி நீங்கள் விரும்பினா வரச் சொன்னவை."

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. ஒருகணம் திகைத்து மறுகணம் அப்பாவின் முகத்தைத் தவிப்புடன் பார்த்தாள்.

"நான் போகட்டுமா அப்பா..."

அந்தக்கேள்வியில் அவர் உள்ளூர நொறுங்கிப்போனது அவரது முகத்தில் தெரிந்தது கண் கலங்க அவள் தவிப்புடன் பார்த்த பார்வை அவரது அடிமனதை உலுப்பியது.

"சரி இனி என்ன... போயிட்டு வரலாம். வா..." தோள் துண்டால் கண்களைத் துடைத்துக்கொண்டார். அவளின் தலையை ஆதரவாய் நீவியபடி கண்ணீரைத் துடைத்து விட்டார் அப்பா.

"உங்களுக்கென்ன விசரே... அவள் அங்க எப்பிடிப்போறது? ஊரில சனம் என்ன கதைக்குங்கள். நடந்ததெல்லாம் போகட்டும், இனியாவது பேசாமல் இருங்கோ...' —அம்மா சத்தம் போட்டாள். அம்மாவின் பக்கமே திரும்பாமல் மனோ தன் அறைக்குள் போனாள்.

மெல்லிய நீலநிறத்தில் சேலை உடுத்திக் கறுப்பு நிறத்தில் சிறிய பொட்டும் வைத்து செருப்புக்களையும் மாட்டிக்கொண்டு வாசலுக்கு வந்தாள். அப்பாவும் தயாராய் நின்றார்.



"குறுக்குப் பாதையால போனா கொஞ்சத் தூரம்தான் நடந்து போயிடலாம், வாங்கோ..." குமார் முன்னால் நடக்க அப்பாவும் அவளும் தொடர்ந்து நடந்தார்கள்.

மண்சாலையில் கற்கள் இடறின. ஒன்பதரை மணிக்கே வெய்யில் சுரீரென்று எரித்தது சிறிய ஒழுங்கையால் நடந்து அகன்ற மண் சாலையில் ஏறினார்கள். அதிலிருந்து வயலின் ஓரமாய் நீண்டிருந்த பாதையில் நடந்தார்கள்.

"உங்களுக்கு நேற்றே வந்து சொல்ல முடியாமல் போயிட்டுது. நீங்களும் வருவீங்களோ மாட்டீங்களே தெரியேல்லை. அதுதான் யோசிச்சுக்கொண்டிருந்தனாங்கள். நீங்கள் வராவிட்டாலும் கூட கட்டாயம் சொல்ல வேணும் எண்டதால தான் நான் வந்தனான்.

அவனது பேச்சு அவள் இதயத்தைத் தொட்டது.

ஜீவாவினால் அங்கீகரிக்கப்படாத உறவை அவன் குடும்பம் அங்கீகரித்து விட்டதா?

"ஜீவா! உங்கட வீட்டுக்கு எப்படி வரவேணும் எண்டு கற்பனை செய்து கொண்டிருந்தன். இண்டைக்கு இப்படி வரவச்சிட்டீங்களே.." அழுகையை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு நடந்து கொண்டிருந்தாள் மனோ.

',இந்தா வீடு வந்திட்டுது..."

பச்சை நிறக் கேற்றைத் திறந்துகொண்டு குமார் முன்னால் போக அவர்கள் தயங்கியவாறு தொடர்ந்தார்கள், கிடுகினால் வேய்ந்த மிகச்சிறிய வீடு. மண்ணால் ஆன தலைவாசல்... முற்றத்தில் நாலைந்து தென்னை மரங்கள். பின்பகுதியில் வயல்வெளி தலைவாசலிலும் வீட்டு விறாந்தையிலும் சோகம் ததும்பிய முகங்களுடன் உறவினர்கள். அத்தனைபேரின் பார்வையும் அவள் மீது பதிந்தது.

மனோவும் தந்தையும் ஜீவாவின் வீட்டு கேற்றைத் திறந்து உள் சென்றதும் ஜீவாவின் அம்மா கலங்கிய கண்களுடன் எழுந்து வந்து அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டு போனாள். அந்தப்பரிவில் அவள் நெஞ்சம் கலங்கிப்போய்விட்டது. ஜீவாவின் முகச்சாயலில் இரண்டு தங்கைகளும் வந்து அவளின் அருகே அமர்ந்து கொண்டார்கள்.

ஜீவாவின் புகைப்படம் பெரிதாக்கப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டிருந்தன.

அதைப்பார்க்க அழுகை அழுகையாய் வந்தது. உயிரோட்டமான பார்வையுடன் தன்னையே அவன் பார்ப்பது போல உணர்ந்தாள்.

சாம்பிராணிப்புகை வாசமும் ஐயரின்மந்திரங்களும் புனிதமான ஒரு சூழலை உருவாக்கின.

அவள் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு நிலைத்த பார்வையுடன் அமர்ந்திருந்தாள்

எல்லாம் முடிந்தபிறகு அத்தனை பேரும் சாப்பிட்டுவிட்டுப் போனபிறகு - ஜீவாவின் அம்மா மனோவையும் சாப்பிடுவதற்கு அழைத்தாள்.

"எனக்கு வேண்டாம்; நான் இண்டைக்குச் சாப்பிடேல்லை"

"இல்லையம்மா .. இண்டைக்கு இது அவன்ர சாப்பாடு... அவனுக்கு வைச்சதை நீ சாப்பிடு என்ர பிள்ளையின்ர சாப்பாடு "

—ஜீவாவின் படத்துக்கு முன்னால் வாழைஇலையில் வைத்த உணவை அவளிடம் எடுத்து வைத்தாள் அம்மா.

அதற்குமேல் அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவர்கள் தந்த செம்பை வாங்கிக் கை கழுவிவிட்டுச் சாப்பிட்டாள். ஐந்தாறுதரம் வாயில் வைத்ததும் துயரம் வெடித்துக்கொண்டு எழ சாப்பிட முடியாமல் எழுந்தாள்.

அந்தக் குடும்பத்தின் ஒவ்வொருவரிடமும் ஜீவாவின் சாயலில் ஏதோ ஒரு அம்சம்.. தங்கள் ஜீவாவினால் நேசிக்கப்பட்டவள் என்பதனாலேயே அவள் மீது அவர்களுக்கு ஏற்பட்ட அபரிமிதமான மதிப்பும் பாசமும் உரிமையும் .. இதே உரிமையை ஜீவா உயிருடன் இருந்தபோதே அவள் அனுபவித்திருக்கலாம்.

வெய்யில் மங்கி மறையும் வரை ஜீவாவைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.



'இந்தத் திண்ணை... இந்த முற்றம்... எல்லாம் அவன் இருந்த இடம்... படுத்த இடம்

"இது அவனுக்குச் சொந்தமான மண்..."

அவள் தளர்ந்து போய் எழுந்தபோது—

"குமார் அவையளோட கூடவே போயிட்டுவா' என்றார் ஜீவாவின் அப்பா.

ஒவ்வொருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு மனோவும் அப்பாவும் நடந்தார்கள், இப்போது தான் எதையோ பறிகொடுத்தமாதிரி அதிக துக்கமாய் இருந்தது அவளுக்கு. வீடுவரையும் அவர்களைக் கொண்டு வந்து விட்ட குமார்,

"இனிமேலும் உங்களுக்கு வசதியான நேரம் எங்கட வீட்ட வாங்கோ. ஐயா அம்மாவுக்கு ஆறுதலாய் இருக்கும்." என்று சொல்லிவிட்டுப்போனான்.

அவள் தன் அறைக்கு வந்தாள். அவளின் துயரங்கள் கிளறுப்பட்டதும் அதனால் ஒரு ஆறுதல் ஏற்பட்டதும் அப்பாவுக்குப் புரிந்திருக்கும்.

ஜீவாவின் வீட்டுக்குப்போய் விட்டுவந்த நேரத்திலிருந்து மனோவின் மனம் நிலை கொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தது. அவர்களுடைய ஏழ்மையான நிலைமையும் எளிமையான தோற்றமும் அவள் மனதை வாட்டியது.

'நூறு வீதமும் தன்னை நம்பியிருந்த இந்தக் குடும்பத்தை விட்டுத்தானே ஜீவா விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்தான்

அவனுக்கு மனதில் எத்தனை வைராக்கியம் இருந்திருக்க வேண்டும் இப்படி ஒரு முடிவை எடுப்பதற்கு. ஆடம்பரங்களும் சுயநலங்களும் மலிந்திருக்கின்ற மக்களின் நடுவே இவன் எவ்வளவு உயர்ந்தவன் என அவள் நினைத்தாள்.

ஜீவா, உங்கட மனதால நேசிக்கப்பட்டதால, மட்டுமே எனக்குப் பெருமை கிடைச்சிட்டுது. இது ஒண்டே எனக்குப் போதும். இனிமேல் ஜீவாவை நினைச்சு அழக்கூடாது... அழவே கூடாது...'

அன்று இரவு மனதில் ஒருவித அமைதியுடன் உறங்க முயற்சித்தாள்.

வெளியே அப்பாவிடம் அம்மா சொல்வது தெளிவாய்க் கேட்டது.

''இவளின்ர போக்கே எனக்கு விளங்கேல்லை. இவள் இப்படியே இருந்து என்ன செய்யிறது. இவளுக்கு ஒருத்தனைக் கட்டி வைச்சால்தானே மற்றப் பிள்ளையளுக்கும் ஒரு வழி கிடைக்கும். மூத்தவள் இப்படி இருந்தால் மற்றதுகளுக்கு எப்படிக் கல்யாணம் நடக்கும். இவளின்ர கோலமே மாறிப் போச்சு...''

''கடவுள் அப்படிக்கொடுமையைச் செய்திட்டான். அது அவளின்ர விதி இல்லாட்டித் தங்கமான அந்தப் பிள்ளைக்கு இப்படிக் கெதியாய் முடிவு வந்திருக்குமே...''

அப்பா பெருமூச்சு விட்டார்.

''சரி விரும்பினாள்; அவன் போயிட்டான். அதோட எல்லாம் முடிஞ்சுதே உங்களுக்கு வாற பென்சனில வீட்டுச் கீவியமும் பார்த்து மூண்டு பெட்டையளுக்கும் ஒருவழி பண்ணவேணும். கையும் கணக்கும் சரியாய் வருகுது. ஏதோ கடனைப்பட்டாவது அவளுக்கு ஒருவழி பண்ணப்பாருங்கோ...''

''இப்போதைக்கு அவளை அவளின்ர வழியில விட்டிடு. பாவம் அவளின்ர மனம் நொந்துபோய்க் கிடக்கு. நாங்கள் அதை மேலயும் நோக வைக்கிற மாதிரி நடக்கிறது கூடாது. தன்ர எதிர்காலத்தை அவளே தீர்மானிச்சுக் கொள்ளட்டும். நீ இனிமேல் அவளோட எதையுமே கதைக்காதை.''

''இப்பிடிச் சுகமாய் நீங்கள் சொல்லிப்போட்டீங்கள். என்ரமனம் கேட்காதாம். பொம்பிளைப்பிள்ளை... எத்தனை நாளைக்குத்தான் இப்படி இருக்கிறது.

''நீ அழாதை. ஏதோ நடக்கிறதைப் பார்த்து நாங்கள் மனதைத் தேற்றிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.''



அதன் பிறகு அவர்கள் பேசவில்லை.

மனோ மேல் கூரையை வெறித்துப்பார்த்தபடி படுத்திருந்தாள்.

அடுத்த நாள் அதிகாலையிலேயே வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. குண்டு வெடிப்புகளும் தொடர்ச்சியான துப்பாக்கி ஓசைகளும் மனதை அதிரச்செய்தன. என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. ஒவ்வொருவரும் ஓடி வந்து வாசலில் நின்று பார்த்தார்கள்.

எங்கோ சமீபத்தில் தான் கேட்டது. இராணுவம் முகாமைவிட்டு வெளியேறி வந்துவிட்டதா... இப்போது ஏழெட்டுமாதங்களாக இராணுவத்தினரை முகாமை விட்டு வெளி வர விடாமல் இளைஞர்கள் தடுத்து வைத்திருந்தார்கள். எப்படி இவ்வளவு கிட்ட வெடிச்சத்தங்கள் கேட்கின்றன...

இராணுவம் வெளியேறி வந்த இடத்தில் ஒரு கடுமையான யுத்தம் நடக்கிறதா? இளைஞர்கள் எதிர்த்தாக்குதல் மேற்கொள்கிறார்களா? ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் ஏதோ பிரச்சினை பெரிதாக ஆகியிருக்கிறது என்ற அளவில் புரிந்தது.

வானத்தில் ஹெலிகொப்டரும் ஒரு விமானமும் வட்டமிடத்துவங்கின. அவை இலக்கு வைத்துச் சுற்றிக்கொண்டிருந்த இடங்களில் தான் வெடிச்சத்தங்களும் கேட்டன ஜீவாவின் வீடும் அந்தத்திசையில்தான் இருக்கிறது என்பதை நினைத்து மனம் கலங்கியது.

தெருவில் ஒரு வாகனம் இரைச்சலுடன் போனது. அதில் ஆயுதங்களுடன் இளைஞர்கள். அவர்கள் முகத்தில் பரபரப்பு... போராடிக்கொண்டிருக்கும் நண்பர்களுக்குக் கை கொடுத்து உதவப்போய்க் கொண்டிருந்தார்கள். எதிரியை களத்திற் சந்திக்கும் ஆத்திரம்

ஆவேசம்...அந்த வாகனத்தைத் தொடர்ந்து சைக்கிள்களில் இருவர் இருவராய் அவசரமாய் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்க்கும்போது ஒரு தடவை ஜீவாவையே தரிசித்தது மாதிரி ஒரு உணர்வு ஏற்பட்டது.

ஜீவாவின் பிரதிபிம்பங்கள்...

"கடவுளே! இந்தப் போராட்டத்தில் இவர்களுக்கு ஒன்றும் நேராமல் இருக்க வேண்டுமே!''

பத்துமணிவரை வெடிச்சத்தங்கள் ஓயவில்லை. பிறகு வெகுநேரம் எந்தச்சத்தமும் கேட்கவில்லை. ஆயுதங்களுடன் இளைஞர்கள் களைத்துப்போன 'முகங்களுடன் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

'ஆமி போயிட்டுதாம், பெடியள் உயிரைக் கையில வைச்சுக் கெட்டித்தனமாய்ப் போராடித்துரத்திப் போட்டாங்கள். ஆனால் ஒரு பெடியன் செத்துப்போச்சுதாம்'

—அப்பா தெருவில் விசாரித்துவிட்டு வந்து சொன்னார்.

இறந்துபோன அந்த முகம் தெரியாத இளைஞனுக்காக ஒரு வினாடி மனதோடு கண்ணீர் விட்டாள். மறுபடி துயரம் புதுப்பிக்கப்பட்டது போல ஜீவாவின் நினைவு அதிகமாய் எழுந்தது.

இன்றைக்குப் பிரச்சினை காலையிலேயே தொடங்கிவிட்டதால் வேலைக்குப்போக முடியவில்லை. மத்தியானம் இரண்டுமணியளவில் அப்பா தெருவில் நாலைந்து இளைஞர்களுடன் பேசிக்கொண்டிருந்தது தெரிந்தது. அவர்களது பேச்சு, கவனத்தைத்திருப்ப அவளும் கேற் வாசலுக்குப்போனாள்.

அப்பா அவளைக் கண்டதும் அவர்களை அனுப்பிவிட்டு வந்தார். முகம் இருண்டு போய் இருக்கப் பதற்றத்தோடு சொன்னார்.



"எப்பிடிச் சொல்லுறதெண்டு தெரியேல்லை மனோ. ஆமிக்காறங்கள் கொஞ்சத்தூரம் வரைக்கும் வந்திட்டாங்களாம். ராத்திரியே வந்து வயல் வெளியளுக்குள்ள படுத்திருந்திட்டாங்களாம். ஜீவாவின்ர வீட்டில... அவன்ர தங்கச்சியை..."

—மேலே சொல்ல இயலாமல் குமுற அவள் அதிர்ந்துபோய் நிமிர்ந்தாள்.

"சுட்டுப் போட்டாங்களாமா?"

"அப்படிச்சுட்டால் பரவாயில்லையம்மா... இது... இது அவங்கள்......"

அவள் துடித்துப்போனாள்.

"வாம்மா, போய்ப்பார்த்திட்டு வரலாம். அதுகளுக்கு கடவுள் தொடர்ந்து சோதனையைக் குடுத்துக்கொண்டே வருகுது. என்ன பாடுபடுங்கள்"

அப்பாவும் அவளுமாய் ஜீவா வீட்டுக்கு வேகமாய்ப் போனார்கள். போகும் வழியில் இருவரும் பேசிக்கொண்டார்கள்.

"இதென்ன கொடுமை... குமார் வீட்டில இல்லையாமா."

"அவன் விடியமுதல் வேலைக்குப்போயிட்டானாம். "தகப்பனும் வயலுக்குப் போயிட்டாராம். வயல் வரம்பில அந்த மனுசனையும் துவக்குக்காட்டி இருத்திப்போட்டாங்களாம். வீட்டில இதுகள்தானே......"

இருவரும் அந்த வீட்டுக்குப்போனபோது அழுகைச்சத்தம்தான் அவர்களை வரவேற்றது. ஜீவாவின் அம்மா அவர்களைக்கண்டதும் தலைதலையாய் அடித்து அழுதாள்.

"ஐயோ இனி நாங்கள் என்ன செய்யப்போறம்.. ... நாங்கள் செத்துப்போனால் கூடப்பறுவாயில்லை ."

அறை மூலையில் கலைந்த தலையுடன் அழுது சிவந்த கண்களுடன் இருபத்திரண்டு

வயது நிரம்பிய ஜீவாவின் தங்கை... மனோவைக்கண்டதும் இன்னும் அழுகை அதிகரிக்க அவளைத்தேற்றி ஆறுதல் சொல்லும் அடுத்த சகோதரி...

தோள்துண்டால் வாய் பொத்திக் குலுங்கி அழும் ஜீவாவின் அப்பா... தலைவாசல் திண்ணையில் வெறித்த பார்வையுடன் இருக்கும் குமார்...

இவர்களுக்கெல்லாம் எப்படி ஆறுதல் சொல்வது... எதைசொல்லி தேற்றுவது மனதின் சுமைகளையும் இழப்புக்களையும் ஆற்றும் சக்தி எந்த வார்த்தைகளுக்கு இருக்கப்பேகிறது...

இந்த மண்ணுக்கான இவர்களின் பங்களிப்பு ஜீவாவின் மரணத்துடன் நிறைவு பெற்று விடவில்லை.

நான்கு நாட்கள் மெதுவாய் நகர்ந்தன. அந்த சம்பவத்தின் அதிர்வுகள் மனதில் ஆறாத வேதனையாய் இருந்தன. அந்த ஏழ்மைக்குடும்பத்தில் இதுவும் ஒரு பெரும் சுமையாகிப்போன கொடுமையைத் தாங்க முடியவில்லை. மறுபடி அவர்களது முகங்களில் விழிக்க அவள் மனம் தாங்காது போலிருந்தது.

சனிக்கிழமை மாலை குமார் அவர்கள் வீட்டுக்கு வந்தான். அவனின் கோலமே மாறிப்போயிருந்தது. நான்கு நாள் தாடி கருகருவென்று இருக்க கண்கள் சிவந்திருக்க... தளர்ந்துபோய் நின்றான்.

அந்தக் கோலத்தில் அவனைக் காணத் 'திக்' கென்றது.

"உங்களிட்ட ஒரு விஷயம் சொல்லியிட்டுப் போகவந்தனான். நான் பெடியளோட போறதாய் முடிவு செய்திட்டன். வீட்ட இன்னும் சொல்லேல்லை. நான் போனபிறகு தெரியவரும் தானே. இவ்வளவும் நடந்த பிறகு நான் இதைத்தவிர வேறு என்ன



முடிவை எடுக்கிறது. இண்டைக்கு என்ரை வீட்டில நடந்த கொடுமை வேற வீட்டில நடக்கிற போது என்னால தடுக்க முடிஞ்சா அந்தத் திருப்தி என்க்குப் போதும்.''

''குமார்... நீ சொல்லுறது சரி... ஆனா நீயும் போயிட்டா உங்கட குடும்பத்தை ஆர் பார்க்கிறது. அவையளுக்கு ஒரு ஆதரவும் இல்லாமல் போயிடுமே...''

''இப்ப அது முக்கியமில்லை. வீடிழந்து பொருளிழந்து சனங்கள் அகதியளாக்கப் படுகிற நேரத்தில அதுகளுக்கு இருக்க ஒரு நிழல் இருக்கு. இதுக்குமேல அதிகமாய் ஆசைப்படலாமே...''

வார்த்தைகள் அவள் நெஞ்சில் சுரீரென்றது.

மனதின் ஆழத்தில் அந்த வலி...

''...இன்னொரு ஜீவா...''

''ஏதோ உங்களிட்டச் சொல்லியிட்டுப் போகவேணும் போல இருந்தது. அதுதான் சொல்ல வந்தனான். நான் போயிட்டு வரட்டா...''

அவன் அவளை நிமிர்ந்து பார்த்துச்சொல்ல... அவளுக்குக் கதறி அழவேண்டும் போலிருந்தது. அவன் சென்று விட்டான். எவ்வளவு நேரம் திகைத்துப்போய் நின்றாளோ தெரியாது. அப்பா வந்து தோளைத் தொட்டதும் துடித்துப்போய் நிமிர்ந்தாள்.

''அப்பா...''

குமார் எனக்கும் சொல்லியிட்டுத்தான் போறான்...''

அவனாலை இப்படி ஒரு முடிவு எடுக்க எப்படி முடிஞ்சது. ஜீவாவின்ர தம்பிக்கு இந்தமனம் எண்டா அவரை விரும்பிய எனக்கு எந்த மாதிரி மனம் இருக்க வேணும். இனி ஜீவாவின்ர குடும்பத்துக்கு ஆர் ஆறுதல்... ஆர் பார்க்கிறது... அப்பா இனி நான் அங்கேயே போறன். இனி அந்தக் குடும்பத்தை நான் தாங்

கப்போறன். இந்த முடிவால என்ர தங்கச்சியவைக்கும் ஒரு வழி பிறக்கும். யாராவது இனிக்கேட்டால் புருஷன் வீட்டில பிள்ளை இருக்குது எண்டு சொல்லலாம். ஒருத்தருக்கும் பிரச்சினை இல்லை. நான் அங்கேயே போயிடுறன். மண்ணுக்கு உயிரைத் தாறது மட்டும் தியாகமில்லை. அப்படி உயிரைத் தந்ததுகளின்ர குடும்பத்தைக் கவனிக்கிறதும் கூட இந்த மண்ணுக்காக நாங்கள் செய்யிற தியாகம் தான். ஒரு வேலையில இருக்கிற என்னால அது முடியும். எல்லா விதத்தாலயும் நொந்து போயிருக்கிறஅதுகளுக்கு ஆதரவு குடுத்து ஆளாக்க என்னால முடியும் அதைத்தான் செய்யப்போறன் அப்பா...''

விம்மி வெடித்துக்கொண்டு அழுதாள் மனோ. அப்படி அழுவதால் அவள் மனப்ப[illegible] ரங்கள் குறையாதா என்ற தவிப்பில் அழுது கொண்டேயிருந்தாள்

வெகு நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்த அப்பா [illegible] முடி வொன்றை அவளால் எடுக்க முடியாது என்று புரிந்து கொண்டு, க[illegible] துடைத்துக்கொண்டு அவள் தலையைப் பரிவுடன் தடவிக் கொடு[illegible]

நிறைவு

# பின்னுரை

1986ஆம் ஆண்டு முரசொலி நடாத்திய குறுநாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை இது.

இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த விடுதலைப் போராட்டத்தில் மக்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் பங்காளிகளாக வேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்து இந்த குறுநாவல் எழுதப்பட்டது.

இந்தக் கதை மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் எழுதப்பட்டது. இராணுவக் கெடுபிடிகள் அதிகமாய் இருந்த நேரம் அது. அன்றைய துயரமான சூழ்நிலையில் ஒரு எழுத்தாளருக்கு இயல்பாக எழக்கூடிய ஒரு ஆதங்கத்தின் வெளிப்பாடாகவே இக் குறுநாவல் இருந்தது.

இந்தப் போராட்டத்தில் மரத்தின் அடிவேரைப் போல வெளியில் தோன்றாமல் பங்களிப்பை செய்யும் பல பேர் எமது சமுதாயத்தில் இருக்கிறார்கள். அவர்களின் ஒரு பிரதிநிதியாக இதன் கதாநாயகியை நான் உணர்கிறேன்.

இக் குறுநாவலை புத்தகமாக வெளியிடுவதற்காக மீரா வெளியீட்டாளர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

குமரபுரம் – பரந்தன்.
13 - 02 - 1994

- தாமரைச்செல்வி

க. பழனிகுரன்
ஆசிரியர்

சமகால நாவல்கள்

- கனவுகள் சுமக்கும் தேசம்

- கனத்த இரவுகள்



மீரா பிரசுரம்
யாழ்ப்பாணம்